# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 33 March - 2019 Issue - 3

ஆசிரியர் உரை

## விழுந்து, எழுந்து, மீண்ட சமாரியர்

இப்பூமிக்குரிய மானிட வாழ்வை நாம் ஓர் ஓட்டத்திற்கு ஒப்பிடலாம். எந்த ஓர் ஓட்டத்திற்கும் துவக்கமும், முடிவும் உண்டு. இக்கூற்று மனிதனின் இப்பூலோக வாழ்வுக்கும் பொருந்தும். மானிட ஓட்டத்திற்குப் பிறப்பு துவக்கமாகவும், இறப்பு முடிவாகவும் இருக்கிறது. இப்படி பிறப்புக்கும், இறப்புக்கும் இடையயான ஓட்டத்தை இப்பூமியில் ஒருவன் மேற்கொள்ளும்போது, எனக்கு எவ்விதத் தடையோ, தடுக்கலோ இருந்ததில்லை என்று யாராலும் சொல்ல முடியாது. இந்நிலையைப் பொறுத்தளவில் விதிவிலக்கு என்பது இல்லை. சொல்லப்போனால், விதிவிலக்கிற்கு இது விதிவிலக்காக அமைந்து விட்டது.

ஆக, மண்ணுக்கான சரீர வாழ்விலும், விண்ணுக்கான ஆவி வாழ்விலும் ஒருவன் தடுக்கித் தடுமாறுகிறான் என்பது வியப்புக்குரிய ஒரு செய்தி அல்ல. எப்படியெனில், நான் மேலே குறிப்பிட்டது போல இது தான் விதிவிலக்கிற்கு விடை கொடுத்த ஆட்கொல்லி பிரச்சினை ஆயிற்றே. ஆகவே, ஒருவன் தடுமாறி விழுந்துவிட்டான் என்பதைப் பெரிதுபடுத்தத் தேவையில்லை. ஆயினும், விழுந்த நிலைமையிலே துவண்டு கிடப்பதையும், எழுவதற்குண்டான எந்த முயற்சியும் எடுக்காமலிருப்பதையும் அறவே ஏற்றுக்கொள்ள முடியாது. வாழ்வில் வெற்றி பெற்றவர்களுக்கும், ஏனையோருக்கும் இடையேயான

சூட்சமம் இங்கே தான் மறைந்திருக்கிறது. மாத்திரமல்லாமல், இரு சாராருக்கும் இடையேயான வேறுபாட்டையும் இது வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது.

விழுந்து கிடப்பதும், எழுந்து நிற்பதும் மண்ணின் வாழ்வோடும், விண்ணின் வாழ்வோடும் சம்பந்தப்பட்டிருந்தாலும், நாம் இரண்டையும் ஒருசேரப் பார்த்துவிட முடியாது. ஏனெனில், வேத வசனங்களின்படி **மண் வாழ்வு எழுபது ஆண்டுகள், பெலத்தின் மிகுதியால் எண்பது ஆண்டுகள்** [சங்.90:10] கொண்டதாகவும், விண் வாழ்வு நித்திய காலத்திற்கும், அதாவது முடிவில்லாத ஆண்டுகளுக்கு நீடிக்கக் கூடியதாகவும் உள்ளது. இப்பேருண்மையை நாம் ஒரு போதும் மறந்து விடக்கூடாது.

சரி, **சமாரியர்கள்** விழுந்தவர்களாகவே இல்லாமல், எழுந்து மீண்டிருக்கிறார்கள் என்பதை வாசிக்கும் போது, இங்கே நமக்குள்ளாக எழக்கூடிய கேள்விகள் **யார் இந்த சாமாரியர்கள்? எப்படி விழுந்தார்கள்? எங்ஙனம் எழுந்து மீண்டார்கள்?** என்பன. அப்படித்தானே! இக்கேள்விக்கான பதிலையும், இதில் அடங்கியிருக்கும் பாடங்களையும் அறிந்து கொள்வதற்குமுன், சமாரியர்கள் பற்றிய பின்னணித் தகவல்களைத் தெரிந்து கொள்ள முயற்சிப்போம். சரியா?

வடக்கு ராஜ்ஜியமாகிய இஸ்ரவேலை ஆண்ட ராஜக்களில் ஒருவனாகிய உம்ரியின் நாட்களில். சேமேர் என்னும் பெயர் கொண்ட ஒருவனிடமிருந்து இரண்டு தாலந்து வெள்ளி கிரயமாகக் கொடுக்கப்பட்டு வாங்கப்பட்ட ஒரு குன்றுப் பகுதிதான் பின்னாளில் சமாரியா ஆனது. இக்குன்றின் மீது, தான் கட்டின பட்டணத்துக்கு, விற்றவன் நினைவாக **சமாரியா** என்று பெயரிட்டான் [Iராஜா. 16:24]. இஸ்ரவேலின் பட்டணங்களுள் இது ஒரு முக்கியப் பட்டணமாக விளங்கியது.

பிறகு, **கி.மு .722** –ம் ஆண்டு வாக்கில் அசீரியா ராஜாக்களில் ஒருவனாகிய **சர்கோன்** சமாரியாவின் மீது படையெடுத்து வெற்றி கண்டு, பெரும்பான்மையோரை நாடுகடத்திய கையோடு, விக்கிரக வணக்கங்களுக்குச் சொந்தமான அந்நிய நாட்டாரை இங்கே கூட்டி வந்து குடியேற்றினான். அப்படி வந்தவர்கள் அவரவர் உடமைகளோடு மாத்திரம் வராமல் தங்கள் தெய்வங் களோடும் வந்து சேர்ந்தார்கள். ஆனால், வாழ வந்த இடத்தில் அவர்களால் நிம்மதியாகக் காலம் தள்ள முடியவில்லை. இதற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் திணறிய போது,

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த ஓர் ஆசாரியன், **கானானின் தேவனை நீங்கள் வணங்காமலிப்பது காரணம்** என்று சுட்டிக் காட்டினான். அதிலிருந்து அவர்கள் யெகோவாவையும் சேர்த்து வணங்க ஆரம்பித்தார்கள். இப்படித்தான் நாம் ராஜாக்கள் நூல்களில் காண்கிறோம். **அப்படியே கர்த்தருக்குப் பயந்தும், தாங்கள் விட்டு வந்த ஜாதிகளுடைய முறைமையின்படியே தங்கள் தேவர்களைச் சேவித்தும் வந்தார்கள்** [IIராஜா. 17:33]. அத்தோடு, யெகோவா வணக்கத்திற்கென்று தங்கள் விருப்பம் போல் ஆசாரியர்களையும் நியமித்துக் கொண்டார்கள். இதினிமித்தம், ஏனைய யூதர்கள் இவர்கள் மோசேயின் பிரமாணத்தை இழிவுபடுத்துகிறார்கள் என்றெண்ணி இவர்களை வெறுக்க ஆரம்பித்தார்கள். போதாக்குறைக்கு, ஒரு காலகட்டத்தில் இவர்கள் **கெர்சீம் மலையில்** ஒரு தேவாலயத்தையும் தங்களுக்கென்று கட்டிக்கொண்ட போது, யூதர்கள் இவர்களை முழுப்பகையாய்ப் பகைத்தார்கள். இந்த வெறுப்பும், பகையும் இயேசு ஆண்டவர் இப்பூவில் ஊழியம் செய்த நாட்கள் பரியந்தம் தொடர்ந்தது [யோவான் 4:9].

முதல் கேள்விகான விடையை ஓரளவு அறிந்து கொண்டோம். இப்பொழுது இரண்டாவது கேள்வி, **சமாரியர்கள் எப்படி விழுந்தார்கள்?** என்பது. இயேசு ஆண்டவர் இப்பூமியில் ஊழியம் செய்த நாட்களில், ஒரு சமயம் யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்குப் போகும் பயணத்தில் சமாரியாவின் வழியாய்ப் பயணித்தார். அங்குள்ள சீகார் என்னும் ஊருக்கு வந்தபோது, இளைப்படைந்தவராய் யாக்கோபின் கிணற்றருகே உட்கார்ந்த போது, தண்ணீர் மொள்ள வந்த சமாரியப் பெண்ணிடம் பேச்சுக் கொடுத்து, அவள் ஆச்சரியப்படும்படி அவள் யார் என்று அவளுக்குக் காட்டின போது, ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன் என்றாள் [யோவான் 4:19].தொடர்ந்து, அவள் தண்ணீர் மொள்ளும் வேலையைத் தள்ளிவைத்து விட்டு, ஊருக்குள் போய் தன் அனுபவத்தை எடுத்துச் சொல்லி, ஊராரை அவரண்டை அழைத்து வந்தாள். அவருடைய போதகத்தால் ஈர்க்கப்பட்ட சீகார் ஊரார் அவரைத் தங்கள் ஊருக்கு அழைத்துப் போய் இரண்டு நாட்கள் தங்கவைத்து, அவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொண்டு, அந்த ஸ்திரீயை நோக்கி : **உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்** [ யோவான் 4:42].

தங்களை வேத விற்பன்னர்கள் என்று பீற்றித் திரிந்த **வேதபாரகர்கள்,** மோசேயின் பிரமாணத்துக்கு நாங்கள் தான் பொறுப்பாளிகள் என்று சுயநீதி பேசித் திரிந்த பரிசேயர்கள்; யூத

மதத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஆலோசனைச் சங்கத்தைத் தங்களுடைய ஏகபோக கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த **சதுசேயர்** போன்றோர்களால் அறிந்து கொள்ளப் படாத ஓர் உண்மையை இந்த சமாரிய கிராமத்து மக்கள் போகிறபோக்கில் கண்டு கொண்டனர். இது என்ன சாதாரணமான ஒன்றா? ஆயினும், **இயேசுவை உலக இரட்சகர்** என்று ஊர் அறிய உரக்கச் சொன்ன இந்தச் சமாரியர்களுக்கு சில ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இயேசுவைப் பற்றி அறிவிக்க வேண்டிய அவலநிலை வந்துவிட்டது. இந்நிலை வந்தபோது தலைமுறைகள் பல கடந்து விடவில்லை. வெறுமனே 4,5 ஆண்டுகளே ஆகியிருந்தது. ஆம்! பெந்தெகொஸ்தே நாளில் எருசலேம் நகரில் ஆரம்பிக்கப்பட்ட கர்த்தருடைய சபைக்குத் துன்பம் வந்தபோது, சிதறப்பட்டுப் போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள் (அப். 8:4). அப்படிப் போனவர்களில் ஒருவானகிய பிலிப்பு, சமாரியாவிலுள்ள ஒரு கிராமத்திற்கு வந்து, அங்குள்ளவர்களுக்கு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கிக்கும் நிலை வந்துவிட்டது ( அப். 8:5).

இந்த வீழ்ச்சியின் வீரியம் எந்தளவு இருந்ததென்று கவனித்தால் ஆச்சரியமாக உள்ளது. 1. சீமோன் என்று பேர் கொண்ட ஒரு மாயவித்தைக்காரன் தன்னை ஒரு **பெரியவனென்று** சொல்லி, **சமாரியா நாட்டு ஜனங்களைப்** பிரமிக்கப்பண்ணிக் கொண்டிருந்துள்ளான் (8:9). 2.தேவனுடைய **பெரிதான சக்தி** இவன் தான் என்று எண்ணி, சிறியோர், பெரியோர் யாவரும் அவனுக்குச் செவிகொடுத்து வந்துள்ளார்கள் (8:10). 3. அநேகங் காலமாய்த் தன்னடைய மாயவித்தைகளினாலே அவர்களைப் பிரமிக்கப் பண்ணினதினால் அவனை **மதித்து வந்தார்கள்** (8:11). தலைகுப்புறவல்லவா விழுந்துள்ளார்கள்!

இப்பொழுது மூன்றாவது கேள்விக்கான பதில். **தேவனுடைய ராஜ்யத்துக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்திற்கும் ஏற்றவைகளைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும், ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்** (8:12). ஆவிக்குரிய ரீதியில், இவர்கள் எழுந்து மீண்டார்கள் என்பதற்கு இதைவிட வேறு.

என்ன சான்று வேண்டும்? சத்தியத்திற்கு தலைசாய்த்த சமாரியர்களுக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள். சரி, அதிலிருந்து நமக்கான பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

## I சமாரியர் மாயவித்தைக்காரனைப் பெரியவனென்று எண்ணினர்

விழுந்து, எழுந்து, மீண்ட சமாரியர் மூலம் நமக்குக் கிடைக்கும் முதல்பாடம், எந்த ஒரு மனிதனையும் ஆவிக்குரிய வாழ்வில் பெரியவனென்று எண்ணக்கூடாது என்பது.

இயேசு ஆண்டவரை உலக இரட்சகர் என்று உரக்கச் சொன்ன சமாரியர் தலைகுப்புற விழுந்து போனதற்கான காரணங்களில் முதற்காரணமாகத் தெரிவது, அவர்கள் மாயவித்தைக்காரனாகிய சீமோனைப் பெரியவன் என்று எண்ணியதே. அப்படி எண்ணியதற்குக் காரணம் அவனுடைய மாய வித்தைகளே. ஒருவன் பெரியவனா என்பதைத் தீர்மானிக்க சமாரியர்கள் பயன்படுத்திய அளவுகோல் மிகக் கீழ்த்தரமானது. சீமோன் என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் அந்த பட்டணத்திலே மாயவித்தைக்காரனாயிருந்து, தன்னை ஒரு பெரியவனென்று சொல்லி, சமாரியா நாட்டு மக்களைப் பிரமிக்கப் பண்ணிக்கொண்டிருந்தான் என்றே வசனம் சொல்லுகிறது (8:9).

ஒருவரைப் பற்றி மதிப்பீடு செய்வதற்கு, ஒருவனுடைய மந்திர தந்திரங்களை, வஞ்சக செயல்பாடுகளை அளவுகோலாகப் பயன்படுத்துவது எவ்விதத்தில் நியாயமாகும்? இந்த சமாரியாவைச் சார்ந்த சீகார் ஊரார் ஒரு கட்டத்தில் இயேசு ஆண்டவரை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்திய அளவுகோல் எது தெரியுமா? கவனியுங்கள். **உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்கள் கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கின்றோம் என்றார்கள்** (யோவான் 4:41,42) இப்படிச் சொன்ன சமாரியர்கள், அப்போஸ்தலர் 8-ல் இப்படியாகி விட்டார்களே! நம்பமுடியவில்லை. ஆனால், இதுதான் உண்மை. கிறிஸ்துவின் உபதேசத்திற்குச் செவிகொடுத்த காலம் மலையேறி மனிதனுடைய வஞ்சகவார்த்தைகளுக்கு மயங்கி, ஆவிக்குரிய வாழ்வில் கீழ்நிலைக்குச் சென்றுவிட்டார்களே!

அப்படியானால், நம்முடைய நாட்களிலான ஆன்மீக நிலை எப்படியுள்ளது? ஆன்மீகக் காரியங்களை மதிப்பீடு செய்வதற்கு நாம் பயன்படுத்தும் அளவுகோல் எது? பக்திக் காரியங்களில் யாரை நாம் பெரியவர்களென்று எண்ணிக் கொண்டுள்ளோம்? இங்கே, இந்த சமாரியர்களைக் கொண்டு, **தேவன் நமக்கு எதை வெளிப்படுத்துகிறார் என்று புரிகிறதா? சமாரியர்கள் கிறிஸ்துவின் உபதேசத்திற்குத் தங்களைக் ஒப்புக்கொடுத்தபோது, உண்மையை அவர் களால் கண்டுபிடிக்கவும், ஏற்றுக்கொள்ளவும் முடிந்தது. ஆனால், உபதேசத்தை ஒதுக்கியபோது மாயவித்தைக் காரனுடைய வலையில் விழு**ம்படி நேர்ந்தது. ஏனெனில், மந்திரமும், தந்திரமும், மாயா ஜாலமும் அவர்களுக்குக் பிரமிப்பூட்டியது. விளைவு? தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும், அவருடைய உபதேசத்துக்கும் எதிரானவன் அவர்களுக்கு பெரிய மனிதனாகி விட்டான்! ஐயோ!

அருமையானவர்களே! இந்த ஆன்மீக அவலம் அப்படியே நம்முடைய நாட்களைப் பிரதிபலிப்பதாக இல்லையா? ஆம், அப்படித்தான் என்பதை மனச்சாட்சி உள்ளவர்கள். மறுக்க மாட்டார்கள். அன்றைக்காகிலும் சமாரியர்களுக்கு ஒருவன் மாத்திரம் பெரியவனாகக் காட்சி தந்தான். இன்றைக்கு நிலைமையைக் கேட்கவே வேண்டாம். ஆம், நம்முடைய நாட்களில் தங்களுடைய பொய்யான அற்புதங்கள் மூலமாகவும், வஞ்சகமும், நயவசனிப்பும் நிறைந்த வார்த்தைகளின் ஜாலத்தினாலும் பல **பெரியவர்கள்** தோன்றி விட்டார்கள். அவர்கள் தான் இன்றைய கிறிஸ்தவத்திற்கு எடுப்பாகத் தெரிகிறார்கள். ஒவ்வொரு சபைக்கூட்டமும் யாராவது ஒருவரைப் பெரியவர் என்று எண்ணி அவர்களுடைய வார்த்தைகளிலும், செயல்பாட்டிலும் மயங்கிக் கிடக்கிறது. இந்த ஆன்மீக அவலத்துக்குக் காரணம் கிறிஸ்துவின் உபதேசம் பின்னுக்குத் தள்ளப்பட்டதே. எள்ளளவும் இதில் சந்தேகம் தேவையில்லை. தீர்க்கதரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர் கெட்டுப் போவார்கள் என்பது எவ்வளவு உண்மையாயிருக்கிறது? சிந்திப்போம்!

### II. சமாரியர் மாயவித்தைக்காரனை தேவனுடைய பெரிதான சக்தி என்று எண்ணினர்

விழுந்து, எழுந்து, மீண்ட சமாரியர் மூலமாக நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், எந்த ஒரு மனிதனுக்கும் பெரிதான வல்லமை கிடையாது என்பது.

சக்தி என்றாலும் வல்லமை என்றாலும் ஒரே பொருள் தான். இந்த அரிய வார்த்தை தேவனுக்கும் (எரே.51:15), அவருடைய குமாரனுக்கும் (ஏசாயா 9:6), பரிசுத்த ஆவியானவருக்கும் (அப். 1:8), அவருடைய வசனங்களுக்கும் (எபி.4:12), அவருடைய சுவிசேஷத்திற்கும் (ரோமர்.1:16) சம்பந்தமுடைய ஒன்று. இப்படிப்பட்ட இந்த உன்னத வார்த்தை சமாரியர்களால் ஒரு மோசடிக்காரனுக்குப் பயன் படுத்தப்பட்டுள்ளது! இங்கே, வசனம் கூறுவதைக் கேளுங்கள். **தேவனுடைய பெரிதான சக்தி இவன் தான் என்று எண்ணி, சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்குச் செவிகொடுத்து வந்தார்கள் (அப்.8:10).** சூப்பர்! அதாவது, சமாரியர்கள் மத்தியில் இவன் ஏக போக செல்வாக்குடன் வலம் வந்துள்ளான். கர்த்தாவே! சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று சாமுவேல் பிள்ளையாண்டான் சொன்னது போல, **மோசடிக்காரனே! சொல்லும் நாங்கள் மண்டியிடுகிறோம்** என்று இவர்கள் சொல்லியுள்ளார்கள்!!

ஜீவனும், வல்லமையுமுடையதாகவும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்தைக் காட்டிலும் கருக்கானதாயும்,

ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும் உருவக் குத்துகிறதாகவும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் உள்ள (எபி. 4:12) தேவ வார்த்தைகளுக்கும், கிறிஸ்துவின் உபதேசத்துக்கும் (IIயோவான் 9) செவிகொடாமல் போகும்போது, ஆவிக்குரிய வாழ்வின் நிலைமை என்ன ஆகிறது என்று பாருங்கள்! ஒரு ஏமாற்றுக்காரன் தேவனுடைய பெரிதான சக்தியாக மாறிவிடுகிறான். இது எப்படியிருக்கு? இப்படிப்பட்ட நிலையைக் குறித்துப் பவுலடியார் தெசலோனிக்கே சபையாருக்கு எழுதும் போது எப்படிச் சாடுகிறார் பாருங்கள். **ஆகையால், சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக் குள்ளாக்கப்படும்படிக்கு கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்** என்று. (IIதெச.2:11,12). இதுதான் சத்தியத்தை நேசியாமல் அநீதியில் பிரியப்படுகிறவர்களுக்கான தீர்ப்பு. நல்லவேளை இந்த சமாரியர்கள் பிலிப்புவின் ஊழியத்தாலும், தேவனுடைய ராஜ்ஜியத்துக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்துச் செய்த பிரசங்கத்தாலும் தப்பித்தார்கள்!

அருமையானவர்களே! இந்த வேத பகுதியை நன்றாகக் கவனித்தால், நம் ஊரில் இன்றைக்கு நடப்பதை, அப்படியே படம் பிடித்துக் காட்டுவது போல் உள்ளது. சிறியோர், பெரியோர் யாவரும் அவனுக்குச் செவிகொடுத்ததுபோல இன்றைக்கும் நடக்கிறது. **படித்தவர் - படிக்காதவர், பணக்காரர் - ஏழை, பெரியவர் –சிறியவர், பரம்பரைக் கிறிஸ்தவர் - பாதியில் வந்தவர், உயர்ந்தவர் - தாழ்ந்தவர், வெளிநாட்டுக்காரர் - உள்நாட்டுக்காரர்** என்று எந்தப் பகுபாடும் இல்லாமல், வயது வேறுபாடும் இல்லாமல், தங்களுக்குப் பிடித்தமான ஏதாவதொரு மனிதனை, தங்களுக்கான ஆன்மீக வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டு, அப்படிப்பட்டவர்கள் செய்வது சத்தியத்தோடு சம்பந்தமுடையதாக இருக்கிறதா என்பது பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாமல், ஒரு வேளை அப்படிப்பட்டவர்கள் மோசடிக்காரர்களாக இருந்தாலும், தேவனுடைய பெரிதான சக்தி என்று எண்ணி, **போடு தோப்புக் காரணம் என்றால் எண்ணிக்கோ** என்கிறார்கள். இந்த ஆன்மீக அலங்கோலத்தை எண்ணி எங்கே போய் முட்டிக் கொள்வதென்று தெரியவில்லை?! மிகுந்த எச்சரிப்போடும், பயபக்தியோடும் தேவனுக்கடுத்த காரியங்களில் ஈடுபடுவது அவசியம்.

### III **சமாரியர் மாயவித்தைக்காரனை அநேக காலம் மதித்து வந்தார்கள்**

விழுந்து, எழுந்து, மீண்ட சமாரியர்கள் மூலமாக நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம் சத்தியத்திற்கு விரோதமான வர்களை நாம் மதித்து நடக்க வேண்டிய அவசியமில்லை என்பது.

பொதுவாக மதிப்பு, மரியாதை என்பது ஒருவரது வயதையும், செயல்பாட்டையும், இன்னும் அவர் வகிக்கும் பொறுப்பையும் சார்ந்ததாக இருக்கும். அப்படி இருந்தும் கூட வயதில் மூத்த ஒருவர் வயதிற்கேற்றபடி நடந்து கொள்ளாமல் போகும் போது, மரியாதையை அவர் எதிர்பார்க்க முடியாது. அதுபோலத்தான், மேலான பொறுப்பில் இருக்கும் ஒருவர் கண்ணியம் தவறி நடக்கும் போது அவமரியாதையைச் சந்திக்க நேரிடும். ஆக, மரியாதை என்பது வயதையும், வசிக்கும் பொறுப்பையும் தாண்டி, செயல்பாட்டையே பெரிதும் சார்ந்திருக்கிறது. இது எல்லாக் காலத்துக்குமே பொருந்தும்.

யதார்த்த நிலை இப்படியிருக்கும் போது, சமாரியர் எப்படி இந்த **மோசடிக்காரனை** மதித்து வந்தார்கள் என்பது புரியவில்லை. ஆயினும், அவர்கள் மதித்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது, அவனுடைய மாய வித்தைகளை மனதார நம்பி யிருக்கிறார்கள் என்றே தெரிகிறது. அத்தோடு தேவனுடைய வார்த்தைகளுக்குத் தங்களை முற்றிலும் அந்நியப்படுத்திக் கொண்டதையும் காட்டுகிறது. உன் சொல்லினிமித்தமல்ல அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசு வாசிக்கிறோம் (யோவான் 4:42) என்றவர்கள், எந்தளவு கேடடைந்து விட்டார்கள் என்று புரிகிறதா? **எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிற பிசாசு எப்படியெல்லாம் வஞ்சித்து விடுகிறான் பாருங்கள்!** ஆகவே தான், யோவான் நற்செய்தியாளர், அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான் என்றும், அவன் பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான் என்றும் கூறியுள்ளார் (யோவான் 6:44).

**எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்** (Iதெச.5:21) என்று தேவன் அவருடைய வார்த்தைகள் மூலம் சொல்லி இருக்கிறபடியால், பக்திக் காரியங்களில் உண்மையைக் கண்டறிய வேண்டியது நம்முடைய பொறுப்பு. நம்முடைய பொறுப்பை தட்டிக் கழிப்போமானால் நாம் பொய்யை நம்பும்படியாகவும், பொய்யர்களையும், மோசடிக் காரர்களையும் மதித்து நடக்க வேண்டிய துர்பாக்கியமும் வந்து சேரும்.

தேவ வார்த்தைகளுக்கும், தேவ திட்டத்திற்கும் எதிரான வர்கள் எப்படி மரியாதைக்குரியவர்களாக இருக்க முடியும்? ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்

கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள் என்றுள்ளது [IIயோவான் 10]. இன்னும் அப்போஸ்தலர் நடபடிகள் 13-ம் அதிகாரத்தில், தேவ வசனத்தைக் கேட்க ஆசையாயிருந்த அதிபதியை விசுவாசத்தினின்று திருப்ப முற்பட்ட மாயவித்தைக்காரன் எலிமாவை, பரிசுத்த ஆவியில் நிறைந்த பவுல், **எல்லாக் கபடமும், எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழியைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ?** [13:10] என்று அர்ச்சிக்கிறார். ஆம், தேவனுக்கு விரோதிகள் மரியாதைக்குரியவர்களல்ல. அவர்களை அவமதிக்க வேண்டுமென்று நான் கூறவில்லை. மாறாக, அப்படிப் பட்டவர்களை மதித்து அவர்களைப் பெரிய மனிதர்களாக ஆக்கவேண்டிய அவசியமில்லை என்றே கூறுகிறேன்.

அருமையானவர்களே! இக்காரியத்தில் நாம் எப்படிப் பட்டவர்களாக உள்ளோம்? அன்றைய சமாரியர்கள் பல காலமாகச் செய்த தவறைத் தான் இன்றைய கிறிஸ்தவமும், பன்னெடுங் காலமாகச் செய்துகொண்டு வருகிறது. பக்திக் காரியங்களிலும், உபதேசக் காரியங்களிலும் மோசடிக்காரர்களாக இருந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல், அணிந்திருக்கும் அங்கிக்கும், போட்டிருக்கும் ஜிப்பாவுக்கும், எடுப்பாகத் தெரியும் கோட்டுக்கும் மதிப்பளிக்கிறோம். இது முறையல்ல. ஆன்மீகக் காரியங்களிலான மதிப்பு மரியாதை அவர்கள் என்ன போதிக்கிறார்கள், எதை உபதேசிக்கிறார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டே இருக்கவேண்டும். உணர்வடைவோம். ஆமென்!! ★

---

## தேவனுடைய துணையால் நமக்கு கிடைக்கும் பலன்கள்

- ★ தேவனுடைய நியாயத்தீர்ப்பு நீதியுள்ளது. தேவன் அவனவனுடைய நீதிக்குத்தக்கதாய் பலனளிப்பார் (ரோமர் 2:6)
- ★ ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேர முடியும் எபிரெயர் ( 4:16)
- ★ நாம் முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடும் போது தேவன் நம் தேவைகளை சந்திப்பார் ( மத்தேயு 6:33)

# பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம்

**Bro. J.C. சோட்**

எல்லாரும் பாவஞ் செய்து, தேவ மகிமையற்றவர்களாகி என வேதாகமம் கற்பிக்கிறது (ரோமர் 3:23). தேவனை விசுவாசித்து, தங்களுடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கைசெய்து, தண்ணீரில் திருமுழுக்குப்பெறும் அனைவரும் இரட்சிக்கப் படுவார்கள் என்றும் அது கூறுகிறது (மாற்கு 16:16; அப்.2:38). இவற்றிற்கு மாறாக நடப்பவர்கள், சந்தேகமின்றி, மன்னிக்கப்பட மாட்டார்கள். பரிசுத்த ஆவியானவர் வல்லமையால் வேத வசனங்கள் வழங்கப்பட்டது. எனவே, ஆவியின் வார்த்தையோடு நாம் தொடர்பு கொள்ளும்போது, நாம் மனிதரோடு அல்ல, அப்போஸ்தலர்களோடு கூட அல்ல, தேவனுடைய இறுதி வெளிப்படுத்துதலை நமக்குத் தந்தவரோடு நாம் தொடர்பு கொள்ளுகிறோம். பரிசுத்த ஆவியானவரை எந்தக் கண்ணோட்டத்தில் நாம் பார்க்கிறோம், அவரைப் பற்றிய நமது மனோநிலை யாது, அவரை நாம் ஏற்றுக் கொள்ளுகிறோமா அல்லது புறக்கணிக்கிறோமா என்பதைப் பொறுத்தே பல காரியங்கள் சார்ந்துள்ளன.

பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவத்தைப் பற்றி வசனங்கள் கூறுகிறது. அவருக்கு விரோதமான பாவத்தைச் செய்கிறவர்களுக்கு இவ்வுலகில் மாத்திரமின்றி, வரப்போகிற உலகத்திலும் மன்னிப்புக் கிடையாது என்றும் அது கூறுகிறது. கிறிஸ்து கூறினார் **ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; எந்தப் பாவமும் எந்த தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் மனுஷ குமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை** (மத்தேயு 12:31,32). இதே போன்ற அறிவிப்பை மாற்கு 3:28,29 வசனங்களில் மாற்குவும் வெளியிடுகிறார்.

இன்னும் இதுபோன்ற வேறு வசனங்களும் வேதாகமத்தில் காணப்படுகிறது. உதாரணமாக, மரணத்துக்கேதுவான ஒரு

பாவத்தைப் பற்றி யோவான் பேசினார். அதாவது, **மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல் செய்யக்கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்; யாருக்கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே: மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு. அதைக்குறித்து வேண்டுதல் செய்ய நான் சொல்லேன். அநீதியெல்லாம் பாவந்தான்; என்றாலும் மரணத்துக்கு ஏதுவல்லாத பாவமுமுண்டு என்று**(யோவான் 5:16,17).

ஆவியை அவித்துப் போடாதிருங்கள் (Iதெச. 5:19) என பவுல் அறிவித்தார். எபிரெய எழுத்தர் கூறினார்: **ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவைருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல் வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசி பார்த்தும், மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்** (எபி. 6:4–6).

பேதுரு எழுதினார்; கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்படாமல், அவர்களுடைய பின்னலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தர்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் சுக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின் படியே அவர்களுக்குச் சம்பவித்து. (பேதுரு 2:2–22).

இப்போது, மேற்குறிப்பிட்ட எல்லா வசனங்களிலும் சில ஒற்றுமைகளை நாம் காணமுடியும் என நான் நினைக்கிறேன். பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம், மரணத்துக்கு ஏதுவான பாவம், ஆவியை அவித்து போடுதல், தேவனுடைய குமாரனை சிலுவையில் அறைதல், அறிந்து பாவஞ்செய்தல், உலக ஆபாசங்களில் திரும்பிச் சென்று முழ்கிப் போதல், ஆகியவைகளைக் காண்கின்றோம். வேறுவிதமாகச் சொன்னால், தேவனுடைய பரிசுத்த ஆவியை புறக்கணிப்பதுவே பரிசுத்த ஆவிக்கு விரேதமான பாவமும், மரணத்துக்கு ஏதுவான பாவமும்

ஆகும். அனனியா, சப்பீரோள் என்பவர்கள் பரிசுத்த ஆவியான வரிடத்தில் பொய் சொல்லி, அந்தப் பாவத்தின் காரணமாக உடனே அதே இடத்தில் அவர்கள் செத்து விழுந்ததை இந்த இடத்தில் சுட்டிக் காட்டுவது மிகவும் பொருத்தமானது.(அப்.5).

மனிதன் செய்யும் எந்தப் பாவமும் மோசமானதே. ஏனெனில், இறுதியில் அது அவனை இழுந்து போகச் செய்கிறது. தேவனுக்குத் தன்னைக் கீழ்ப்படுத்தாமல் இவ்வுலகைவிட்டு செல்லக்கூடாது என அவன் நினைக்கலாம். என்றாலும், மனஸ்தாபப்பட்டு தேவனுக்குக் கீழ்ப்படிந்து இரட்சிப்படையும் செயலை தள்ளிப்போட்டு கொண்டே செல்லும்போது, அவன் வீழ்ந்து போகக்கூடும். ஆனால், ஒருவன் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது, கர்த்தரை விசுவாசித்து, அவனது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவில் அவனுடைய விசுவாசத்தை அறிக்கைசெய்து, தனது பாவங்கள் மன்னிக்கப்பட தண்ணீரில் திருமுழுக்குப் பெற விரும்பினால், அவன் இரட்சிப்பு அடையக்கூடும்.

பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவத்தை எது உண்டாக்குகிறது என்பது பற்றி, தங்கள் விருப்பம் போல சிலர் முடிவுக்கு வந்துள்ளனர். அதாவது, அப்படிப்பட்ட ஒரு பாவத்தை ஒருவனோ அல்லது ஒருவளோ செய்துவிட்டால், அதன் பின்பு அப்பாவத்திலிருந்து மனந்திரும்பி தேவனுக்கு கீழ்ப்படிய விரும்பினால், அது முடியாது என்று சிலர் பெந்தெகொஸ்தே நாளிலே தேவனுக்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டு, சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்களே இரட்சிக்கப்பட்டது உண்மையாக இருக்கும் போது, நாம் செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் நானும் நீங்களும் இரட்சிக்கப்படுவது நிச்சயமாக இருக்குமல்லவா!

சபையை தான் துன்புறுத்திய காலத்தைப் பவுல் நினைவு கூறுகிறார். அது அவரை வாட்டுகிறது. பாவியில் மாபாவி என தன்னைத்தானே குறிப்பிடுகிறார். இருந்தபோதிலும் அவர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார். அவருடைய பாவங்கள் கழுவப்பட்டன. கர்த்தரின் மிகப்பெரிய ஓர் உன்னத ஊழியனாக அவர் மாறினார் (அப். 8, 9,22; அதிகாரங்கள், ஐதீமோ.1:15). தனது ஆரம்ப நாட்களில், கர்த்தருக்கு விரோதமான பல காரியங்களைச் செய்தவராகிய பவுல், தனது பாவங்களுக்கு மன்னிப்பு அடைந்திருப்பாரேயாகில், தங்களை கர்த்தரிடத்தில் ஒப்புவிக்கும் யார் வேண்டுமானாலும் இன்று பவுலைப் போல நிச்சயமாக இரட்சிப்படைய முடியும்.

ஒருவன் தான் செய்த பாவங்களுக்காக அக்கறைப் படாமல், பாவங்களுடன் மரணமடைந்து போனால், அவன் வீழ்ந்து போனவனாகிறான். அவனுக்கு இரண்டாவது சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்றோ அல்லது உறவினர்களும் நண்பர்களும் ஜெபம் செய்து, வீழ்ந்த நிலையிலிருந்து அவனைக் காப்பாற்றி, இறுதியில் அவனை இரட்சிப்படைய வைக்க முடியும் என்றோ வேதம் எங்கும் கற்பிக்கிறதில்லை. மாறாக, தேவனைக் சந்திக்க நீ ஆயத்தமாக வேண்டிய நேரம் இதுவே என்று தான் வேதாகமம் கூறுகிறது (IIகொரி.6:2; எபி, 9:27). புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ள ஆவியின் வெளிப்படுத்துதல்களை ஏற்றுக் கொள்ள உங்களை நான் ஊக்கப்படுத்துகிறேன். கிறிஸ்து கூறினார் : .... வாருங்கள். ... என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்..... (மத். 11: 28-30). மீண்டுமாக நாம் படிக்கிறோம்: ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன் (வெளி. 22:17). நிச்சயமாக, அவரை விசுவாசித்து, அவருக்குக் கீழ்ப்படிய அது உங்களை வழி நடத்தும். அவருக்குக் கீழ்ப்படியும் சகலரையும் அவர் இரட்சித்து, நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையை அளிக்கிறார். ★

## யோவானில் யார் சீஷன்?

- ★ கிறிஸ்துவின் சீஷன் - அவருடைய உபதேசத்தில் நிலைத்திருப்பான் யோவான் 8:31
- ★ கிறிஸ்துவின் சீஷன் - ஒருவருக்கொருவர் அன்பாயிருப்பான். யோவான் [15:9,10]
- ★ கிறிஸ்துவின் சீஷன் - கனி கொடுப்பான் [15:5-10]

பெண்கள் பகுதி

# தரித்திரர்கள் எப்போதும் உங்களோடிருக்கிறார்கள்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே, இம்மாதமும் உங்களோடு சேர்ந்து கர்த்தருடைய வார்த்தைகளைப் படிக்க, இரக்கம் பாராட்டின தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்

மேலே காணும் இந்தத் தலைப்பு, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலிருந்து பேசின வார்த்தைகள். மூன்று சுவிசேஷப் புத்தகத்திலும் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இயேசுவுக்கு மிகவும் விருப்பமான ஊராகிய பெத்தானியாவில் இச்சம்பவம் நடைபெற்றது. மரியாள் விலையேறப் பெற்ற நளதம் என்றும் தைலத்தை இயேசுவின் பாதத்தில் ஊற்றி, தன் தலை மயிரால் அதை துடைத்த போது, இந்த தைலத்தை உயர்ந்த விலைக்கு விற்று, தரித்திரருக்கு கொடுக்கலாமே என்று கூறிய சீஷர்களிடம் **தரித்திரர் எப்போதும் உங்களோடிருக்கிறார்கள், நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன்** என்று பதிலுரைக்கிறார் நமதருமை இரட்சகர் இயேசுகிறிஸ்து.

நாம் வாழும் இன்றைய நாட்களிலும், இயேசு கிறிஸ்து வாழ்ந்த நாட்களிலும் ஏழைகள் இருக்கவே செய்தார்கள். மாம்சப்பிரகாரமான ஏழைகள் இருக்கிறார்கள். ஆவிக்குரிய ஏழைகளும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சரி, பரிசுத்த ஆவியானவர் வேதத்தில் இவர்களைப் பற்றி என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

வேதாகமத்திற்குச் சென்று நாம் பார்க்கும்பொழுது இயேசுவும், அவருடைய சீஷரும் ஏழைகளாயிருந்தார்கள். மனுஷ குமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை (லூக்கா 9:58) என்று வாசிக்கிறோம். வெள்ளியும், பொன்னம் என்னிடத் திலில்லை என்று பேதுரு அப்.3ம் அதிகாரம் 6-ம் வசனத்தில் கூறுகிறதை நாம் வாசிக்கிறோம். இயேசு தம் சீஷர்களுடன் தம் ஊழிய நாட்களில் நண்பர்களோடு தங்கி, எளிய உணவை அருந்தினார்கள் (மத்.10). அப். பவுல் தன் சொந்தக் கையால் வேலை செய்து ஊழியத்தைச் செய்ய வேண்டியிருந்தது (அப்.18:1-3).

மேலும் சுவிசேஷம் முதன் முதலில் ஏழைகளிடத்திற்குத் தான் எடுத்துச் செல்லப்பட்டது. மத்.11:5-ல் பார்க்கும் போது, குருடர் பர்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள்.

குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள். தரித்திரக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது என்று தேவ ஆவியானவர் மத்தேயு ஆசிரியரை கொண்டு வெளிப்படுத்தியுள்ளார். தரித்திரருக்கு ஏன் சுவிசேஷம்? தங்கள் முழு நம்பிக்கையையும் அதின் மேல் வைக்குமளவுக்கு ஐசுவரியம் அவர்களுக்கு இல்லாதிருந்தது ஒரு காரணம். மேலும், தரித்திரர்தான் சொல்வதைக் கேட்பார்கள். அவர்களிடத்தில் தான் தாழ்மை இருக்கும். தங்கள் வாழ்க்கை மேம்படைய வேண்டும் என்றும் விரும்புகிறார்.

சரி, இனி ஏன் சில மக்கள் தரித்திரராக இருக்கிறார்கள்? என்று பார்ப்போம். சிலர் தரித்திரத்திலேயே பிறக்கிறார்கள். சிலர் சூழ்நிலையினிமித்தம் தரித்திராக மாறுகிறார்கள். தங்கள் வாழ்க்கையை மேம்படுத்தி கொள்ள வாய்ப்பே இல்லாமல் விரும்பி அதுவே போதும் என்று முன்னேற மறுத்து விடுகிறார்கள். சிலரைப் பார்த்தால், தாங்களாகவே தரித்திரத்தைத் தெரிந்துகொண்டு வாழ்க்கை நடத்துகிறார்கள். சில மக்களைப் பார்த்தால் சோம்பேறித் தனத்தினால் தரித்திரராகிறார்கள். இப்படி பல தரப்பட்ட தரித்திரர்களை நாம் சந்தித்துக் கொண்டு இருக்கிறோம்.

இனி இவர்களுக்காக நாம் என்ன செய்ய முடியும்? என்று பார்ப்போம். **முதலாவது** நாம் அவர்களிடத்தில் அன்பு கூர வேண்டும். பிரியானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்பு கூரக் கடனாளிகளாயிருக்கிறோம். தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை. நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூர்ந்தால், தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும் (1யோவான் 4:11,12). ஏழைகளிடம் அன்பு கூருவது தேவனிடத்தில் அன்பு கூருவதற்கு சமம்.

**இரண்டாவது,** அவர்களுக்கு சுவிஷேத்தை பிரசங்கிக்க வேண்டும். பின்பு, அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (மாற்கு 16:15) என்று இயேசு கட்டளையிட்டுள்ளார்.

**மூன்றாவதாக,** தங்களுத் தாங்களே உதவிக்கொள்ளும் படி நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே (2 தெச. 3:10). அவர்களை வேலை செய்ய பழக்கி அதினால் அவர்கள் பிழைக்கும்படி பழக்கப்படுத்த வேண்டும். **நான்காவதாக,** மிகவும் மதிப்புள்ள உண்மைகளை அவர்களுக்குக் கற்றுக்கொடுப்போம். **ஆகையால், நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்** (கலா. 6:10).

**ஐந்தாவதாக,** பாரபட்சம் பார்க்காமல் இருப்போமாக. என் சகோதரரே, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக் கொள்ளதிருப்பீர்களாக. ஏனெனில், பொன்மோதிரமும், மினுக்குள்ள வஸ்திரமும் தரித்திருகிற ஒரு மனுஷனும், கந்தையான வஸ்திரம் தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும்போது, மினுக்குள்ள வஸ்திரந்தரித்தவனைக் கண்ணோக்கி, நீர் இந்த நல்ல இடத்தில் உட்காரும் என்றும், தரித்திரனைப் பார்த்து நீ அங்கே நில்லு, அல்லது இங்கே என் பாதபடியண்டையிலே உட்காரு என்றும் நீங்கள் சொன்னால், உங்களுக்குள்ளே போதகம் பண்ணைத் தகாத சிந்தனைகளோடே நிதானிகிறவர்களாயிருப்பீர்களால்லவா? (யாக். 2:1-4). எனவே ஐசுவரியவான்களை மதித்து, தரித்திரரை ஒடுக்கக் கூடாது. **ஆறாவதாக,** தகுதியுள்ளவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் (ரோமர் 15: 26) மக்கெதொனியாவிலும், அகாயாவிலுமுள்ளவர்கள் எருசலமேலிலுள்ள பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காக சில பொருள் சகாயம் செய்ய விருப்பம் கொண்டிருக்கிறார்கள். எல்லோருக்கும் நாம் உதவி செய்வதை விட பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்கு உதவி செய்ய வேண்டும்.

இந்த உலகிலேயே நாம் பார்க்கும் போது இரு வகையான மக்களுக்கு உதவி செய்வது மிகவும் சிரமம். அவர்கள் யாரென்றால், பிச்சை எடுக்கிற ஏழைகள், மிகவும் ஐசுவரியவான்கள். யாரெல்லாம் உதவி பெற தகுதி உள்ளவர்களாயிருக்கிறார்களோ, விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்களோ அவர்களுக்கு உதவி செய்யலாம். மேலும் , உதவியை பெற்று தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்பவர்களுக்கும் நாம் உதவி செய்ய வேண்டும்.

பிரியமான சகோதரிகளே, தேவன் எப்படி தமக்குச் சொந்தமான, தன் அருமையான, ஒரே குமாரனை நம்மெல்லாருக்காவும் கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தாரோ அதுபோல நாமும் பிறருக்குக் கொடுத்து அன்பு செலுத்த வேண்டும். தரித்திரர் பற்றி வேதாகமம் கொண்டு சில பாடங்களை நாம் கற்றோம். ஆவிக்குரிய ரீதியிலும், சரீரத் தேவைகளையும் இழந்து தவிக்கும் தரித்திரரை கண்டுபிடித்து வேதம் சொல்லுகிறபடி செய்து, நாமும் பரலோகம் செல்வதோடு, தரித்திரர்களும் பரலோகம் செல்ல அவர்களுக்கு உதவி செய்வோம். ஆமென்! ★

வாலிபர் பகுதி

# ஆவியின் கனியாகிய அன்பு

Dr. ஏபில் நாயகம்

**தே**வனுடைய பரிசுத்தமான நாமத்தில் வாலிபர்களாகிய உங்களுக்கு வாழ்த்துக்கள். தேவனுடைய வார்த்தைகளின் துணையோடு உங்களோடு உரையாடுவது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. கடந்த மாதம் ஆவியினாலே சரிரத்தின் கிரியைகளை அழித்துப் போடுவதன் முக்கிய துவத்தையும், அதை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதையும் பற்றிப் பார்த்தோம். சரீர இச்சைகளை ஒழிப்பதோடு மட்டும் நம் வேலை முடிவதில்லை. ஆவியின் கிரியைகளில் எப்படிப் பெருகி வளருவது என்பதில் நம் கவனம் எப்பொழுதும் இருக்க வேண்டும். கர்த்தருக்கு சித்தமானால் வரும் மாதங்களில் ஆவியின் கனிகள் ஒவ்வொன்றையும் குறித்து தியானிக்க முயற்சி செய்வோம்

நம் தேவன் அன்பாகவே இருக்கிறார் [I யோவான் 4:8 ]. ஆனால் அன்பு என்றால் என்ன? ஒரு கிறிஸ்தவனுடைய அன்பின் நிலைப்பாடு என்ன? தேவனிடத்திலும் சக மனிதர்களிடத்திலும் எப்படி அன்புகூர வேண்டும்? என்ற கேள்விகளுக்கு வேதத்தின் துணையோடு நாம் பதில்களைத் தேடுவோம்.

II கொரி. 13:11 ல்– அன்பிற்குக் காரணமாக தேவன் இருக்கிறார் என்று வாசிக்கிறோம். அவர் அன்பின் பிறப்பிடமாகவே இருக்கிறார். அந்த தேவன் அவருடைய அன்பை நம் மீது காட்டியிருக்கிறார். ரோமர் 5:8ல் **நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே , தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்க பண்ணுகிறார்** என்று வாசிக்க முடியும். சற்றும் தகுதியில்லாத நம்மேல் அந்த அன்பை விளங்கப் பண்ணினார். ஒருவன் தன் சிநேகிதருக்காக தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமாக முழுமையான உச்ச கட்ட அன்பைத்தான் தேவன் நம்மீது காட்டினார். நமக்காக மரித்ததினாலே தேவனின் குமாரனாகிய கிறிஸ்துவும் அவ்வன்பை வெளிப்படுத்தினார்.

தேவனிடமிருந்தும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடமிருந்தும் வந்த அன்பை ருசி பார்த்த நாம் அந்த அன்பை நம் வாழ்வில் எப்படிப் பிரதிபலிக்கிறோம்? எபேசியர் 5:21

நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள் என்று பவுல் கூறுகிறதை வாசிக்கிறோம். தேவனும் நாம் அவரைப் போலவே அன்பைப் பிரதிபலிக்கிற பிள்ளைகளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். கொலோ 3:12–14 ல் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ள வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் கொலேசே சபையை உற்சாகப்படுத்துகிறார். Iகொரி 16:14ல் **உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப் படக்கடவது** பிரியமான வாலிபர்களே இன்னும் அநேக வசனங்களை நாம் வாசிக்கலாம். ஆனால், நாம் நம்மை கேட்டுக்கொள்ள வேண்டிய ஒரு கேள்வி நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்திலும் உண்மையான அன்பு இருக்கிறதா?

நாம் செய்கிற காரியங்களில் அன்பு இருக்கிறதா? என்ற கேள்வியின் அர்த்தம் என்ன? தேவனுடைய அன்பை கிரியைகளில் வெளிப்படுத்துவதாகும். தேவனுடைய நாமத்தை உச்சரிப்பதால் அவர் அன்பை பிரதிபலிக்கிறவர்களாக நாம் மாறி விட முடியுமா? உரத்த சத்தமாய் பாடுவதும், ஆடல் பாடல்களோடு ஆராதனை செய்வதும், தேவனுடைய அன்பை நாம் கிரியைகளில் வெளிப்படுத்துவதாகும். தேவனுடைய நாமத்தை உச்சரிப்பதால் அவர் அன்பை பிரதிபலிக்கிறவர்களாக நாம் மாறி விடமுடியுமா? உரத்த சத்தமாய்ப் பாடுவதும், ஆடல், பாடல்களோடு ஆராதனை செய்வதும், தேவனுடைய அன்பை நாம் பிரதிபலிக்கப் போதுமானதாக இருக்குமா?

யோவான் 14:15 ல், நீங்கள் அன்பாய் இருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என்று வாசிக்கிறோம். அப்படியென்றால், எதைச் செய்கிறோமோ இல்லையோ, அவருடைய கற்பனைகளான வசனங்களை நாம் நிச்சயம் கைக் கொண்டாக வேண்டும்.

நாம் தேவனுடைய அன்பினாலும் கிறிஸ்துவின் அன்பினாலும் நிலைத்திருக்க வேண்டுமானால் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவும் பிதாவின் அன்பிலே கற்பனைகளை செய்வதன் மூலம் நிலைத்திருந்தார் ( யோவான் 15:10). கற்பனைகளை கைக்கொள்ள முதலாவது கற்பனை களைக் கற்றுக்கொள்ள வேண்டும். அநேக வாலிபர்கள் தவறாமல் ஆராதனைக்குச் செல்லும் பழக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால், தேவனுடைய வசனங்களைக் கற்று கொள்வதில் மிகவும் பின்தங்கி இருப்பார்கள். தேவனுடைய வசனங்களை, அவருடைய கற்பனைகளைத் தெரிந்து கொள்ளாமல், யாராலும் அதைக் கைக்கொள்ள முடியாது. கைக் கொண்டு

நிறைவேற்றாமல் அவருடைய அன்பை நம்மால் பிரதிபலிக்க முடியாது. ஆக, நாம் கிறிஸ்துவுக்கு சிநேகிதராக மாற அவருடைய கற்பனைகளைக் கற்று பின் அதைக் கைக்கொள்ள வேண்டும்.

Iயோவான் 4:20-21 ல், தேவனுடைய அன்பை நாம் நம் வாழ்வைப் பிரதிபலிக்க வேண்டுமானால் தேவனுடைய கற்பனைகளைக் கற்று அவைகளுக்குக் கீழ்ப்படிந்து சகோதரரே நாம் சிநேகிக்க வேண்டும் மற்றும் அவர்களிடத்தில் அன்பு கூர வேண்டும். ஒருவேளை, நீங்கள் இந்தக் கற்பனைகளைக் நிறைவேற்றுபவராக இருந்தால் மகிழ்ச்சி. ஆனால் நிறை வேற்றாதவராக இருந்தால், கவனமாகச் சிந்தியுங்கள். Iயோவான் 3:16-18 ல் சரீர தேவையிலிருக்கும் சகோதரருக்கு நாம் உதவ வேண்டும். ஆவிக்குரிய வகையில், ஒரு சகோதரன் வழிவிலகிப் போனால். அவரை அணுகி, தப்பிப்போன மார்க்கத்தினின்று அவர்களைத் திருப்பவேண்டும். இதைச் சாந்தமுள்ள ஆவியோடு செய்ய வேண்டும்.

பிரியமான வாலிபர்களே! நாம் ஒவ்வொருவரும் ஆவியின் கனிகளைக் கொடுக்கிறவர்களாகவும், அதில் வளருகிறவர் களாகவும் இருக்க வேண்டும். தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதின் மூலமாகவும், சகோதர்களை நேசிப்பதின் மூலமாகவும் தேவனுடைய அன்பை நம் வாழ்வில் பிரதிபலிக்க முடியும். அதன் மூலம் தேவனுடைய நாமம் மகிமைப்படும். இம்முயற்சியில் வெற்றி பெற தேவன் நமக்கு உதவி செய்வாராக! ஆமென். ★

**நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் தேவனிடம் நம் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான மிகச் சிறந்த காரணங்களுள் ஒன்று நாம் வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்தும் முடிக்காமல் இருக்கும் காரியங்களை நாம் முழங்காலில் நிற்பதால் தேவன் சில நிமிடங்களில் முடித்துவிடுகிறார்.**

சிறுவர் பகுதி

# ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபம்

Dr. பிரெய்ஸி

என்ன பிள்ளைகளே! எப்படி இருக்கின்றீர்கள்? கடந்த மாதம் நான் உங்களுக்குக் கொடுத்த செய்முறைப் பயிற்சி பிடித்திருக்குமென நம்புகிறேன். அநேக பிள்ளைகள் விடைகள் அனுப்பியது குறித்து எனக்குப் பெருமையாக இருக்கிறது. பிள்ளைகள் அனைவரும் உணவு உண்ணுமுன் தேவனுக்கு நன்றி சொல்லி பின் தான் சாப்பிடுவீர்களென நம்புகிறேன். சரி, இந்த மாதம் எல்லாக் காரியங்களுக்கும் தேவனுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும் என்பது குறித்துப் பார்ப்போம். ஜெபிக்கும் போது பாடம்படிக்கும் போது, நாம் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். எல்லாவற்றிற்கும் மேல் தேவன் பதில் கொடுக்கும் போது நாம் நம் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

I தெசலோனிக்கேயர் 5:16 ல், எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்.அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்த மாயிகிறது, என நமக்கு போதிக்கிறது. யோவான் 11:38-44 வரை வாசிக்கும் போது, லாசருவை இயேசு உயிரோடு எழுப்பும் முன் தேவன் நோக்கி பிதாவே நீர் எனக்கு செவிகொடுத்த படியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன் என்று தேவனுக்கு நன்றி சொன்னதை நாம் காண்கிறோம். தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து ஜெபிக்கும் போது அக்காரியம் நிறைவேறிவிட்டது. இது நாம் ஒவ்வொரும் தேவனுக்கு எல்லாக் காரியத்திலும் நன்றி சொல்ல வேண்டுமென்பதைக் கற்றுத் தருகிறது. நாம் நன்றியோடு ஜெபிக்கவேண்டும். அப்பொழுது தேவன் நம்மை எல்லாச் சூழ்நிலைகளிலிருந்து வெளிவர பெலனளிப்பார்

பிலிப்பியர் 4/6,7 இப்படி நமக்கு சொல்லித் தருகிறது நீங்கள் ஒன்றுக்கு கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துகள்.

அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக் கொள்ளும் என்று.

என் அருமையான பிள்ளைகளே, உங்கள் ஜெபம் கேட்கப்பட்டு உங்கள் தேவைகள் சந்திக்கப்பட்டவுடன் நம் தேவனுக்கு நன்றி சொல்ல மறவாதிருங்கள். லூக்கா 17/11-9 வரை வாசிக்கும் போது இயேசு பத்து குஷ்டரோகிகளை குணமாக்கியும் அதில் ஒருவனே நன்றி சொல்ல திரும்பி இயேசுவிடம் வந்தான். நாமும் நன்றிசொல்ல மறந்த அந்த குணமான ஒன்பது குஷ்டரோகிகளைப் போலல்லாமல் நன்றியோடு இயேசுவிடம் திரும்பி வந்த அந்த ஒரு குஷ்டரோகியைப் போல் இருக்கவேண்டும். பிள்ளைகளே நீங்களும் எல்லா வற்றிற்காகவும் தேவனிடத்தில் நன்றியோடு ஜெபிக்க ஆரம்பியுங்கள். கர்த்தர் உங்களை ஆசிர்வதிப்பாராக!

**அன்புடன், உங்கள் பிரெய்ஸி அக்கா.** ★

---

## சிறுவர்களுக்கான வேத வினா (படிக்க யோவான். 10-38 -44)

- ★ லாசரு மரித்து எத்தனையாவது நாள் இயேசு, லாசருவின் கல்லறைக்கு வந்தார்?
- ★ லாசருவின் எந்த சகோதரி இயேசுவிடம் வந்து பேசினாள்?
- ★ உரத்த சத்தமாய் லாசருவே வெளியே வா என்று சொல்லு முன்பு இயேசு என்ன செய்தார்? லூக்கா 17 (11-19)
- ★ இயேசு எங்கு பிரயாணம் பண்ணினார்?
- ★ எத்தனை குஷ்டரோகிகள் அவருக்கு எதிராக வந்தார்கள்?
- ★ குஷ்டரோகிகளைப் பார்த்து யாரிடம் காண்பியுங்கள் என்று இயேசு சொன்னார்?
- ★ எத்தனை குஷ்டரோகிகள் குணப்படுத்தப்பட்டனர்?
- ★ எத்தனை குஷ்டரோகிகள் ஆரோக்கியமானதைக் கண்டு இயேசுவைக் காண திரும்பி வந்தனர்?
- ★ குணமடைந்ததைக் கண்டு இயேசுவிடம் திரும்பி வந்தவன் யூதனா அல்லது சமாரியனா?
- ★ பத்து குஷ்டரோகிகளின் சம்பவம் இயேசுவின் பிரசங்கமா? அல்லது அவர் செய்த அற்புதமா?

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு...

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை 'ஏப்ரல்' மாத இதழில்)**

## சாமுவேல் புத்தகத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்

1) ஏலியின் இரண்டு குமாரர்களின் பெயர் என்ன?
2) அன்னாளின் கணவர் பெயர் என்ன?
3) அன்னாள் எங்கே விண்ணப்பித்துக் கொண்டிருந்தாள்?
4) யார் கர்த்தருக்கும், மனுசருக்கும் பிரியமாக நடந்து கொண்டான்?
5) தேவனுடைய பெட்டி எங்கே இருந்தது?
6) கர்த்தர் பின்னும் எங்கே தரிசனமானார்?
7) யார் தேவனுடைய பெட்டியை பிடித்துக் கொண்டு போனார்கள்?
8) இஸ்ரவேல் புத்திரர் யாரை விலக்கி விட்டு கர்த்தருக்கு ஆராதனை செய்தார்கள்?
9) சாமுவேல் எவ்வகையான பலியை செலுத்தினார்?
10) பெயர்செபாவிலே நியாயாதியாக இருந்தது யார்?

## பிப்ரவரி மாத வினாக்களுக்கான விடைகள்

1. பேரேஸ் (4:18)
2. போவாஸ் (2:1)
3. ஒர்பாள் (1:14)
4. கர்த்தர் உங்களோடே இருப்பாராக (2:4)
5. காரியத்தை உறுதிப்படுத்த (4:7)
6. பேரேசின் வீட்டைப்போல் ஆகக்கடவது (4:12)
7. ஓபேத் (4:17)
8. வாற்கோதுமை அறுப்பின் துவக்கத்தில் (1:22)
9. எலிமெலேக்கு, நகோமி, மக்லோன், கிலியோன் (1:2)
10. பட்டணவாசலில்(4:1)

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| S. மரியாள் | — | மணலி, சென்னை |
| M. செல்வம் | — | வெள்ளலூர் |
| C. சாவித்திரி | — | திருப்பத்தூர் |
| G. பாக்ய சம்பூர்ணம் | — | ஈரோடு |
| C. தர்மராஜ் | — | நுள்ளிவிளை |
| S. ஜேசுராஜ் | — | மணப்பாறை |
| J.ரெபேக்காள் | — | மணப்பாறை |
| V.C. ரூபவல்யா | — | நாசரேத் |
| N. ஜெபத்தாய் | — | நாசரேத் |
| S. சாந்தகுமாரி | — | நாசரேத் |
| K.S. மாணிக்கவாசகம் | — | திருச்சி |
| N. இந்திராஜெபகனி | — | நாசரேத் |
| J. ஜெயமணி ஜெயபாண்டியன் | — | கடலூர் |
| G. சாமுவேல் மோகன்தாஸ் | — | சென்னை |
| V.S.S. பால்ராஜ் . | — | மதுரை |
| D. பவானிஅம்மாள் | — | துத்திகுளம் |
| J. ஜான்சி | — | ஆனைமலை |
| S. மரியஅந்தோணி | — | திருச்சி |
| M. தங்கத்தாய் | — | பொங்கலூர் |
| J. மெர்சி ஜெபராஜ் | — | சென்னை |
| S. ஜெனிபர் | — | கேத்தி பாலடா |
| செல்வமணி குணசேகரன் | — | சென்னை |
| T. சாந்தி பாபு | — | சென்னிமலை |
| S. ஜோதி சுரேஷ் | — | திருச்சி |
| C.அருள்ராஜ் | — | சென்னை |
| S. ஜெயராஜ் | — | கோவை |
| R. ராஜேந்திரன் | — | கோவை |
| M.P. சார்லஸ் முல்லர் | — | சென்னை |
| D. அகஸ்டி | — | மணலி, சென்னை |
| E. கங்கா | — | மணலி, சென்னை |
| R. இளவரசி | — | காங்கயம் |
| P. உமாதேவி | — | காங்கயம் |
| K. ராமசாமி | — | காங்கயம் |
| R. ராமசந்திரன் | — | காங்கயம் |
| D. பாலாமணி | — | காங்கயம் |
| S. செல்வி | — | காங்கயம் |
| ஷீலா | — | காங்கயம் |
| ப்ளோரா சம்மா | — | திருப்பத்தூர் |

# விதையும், இதயமும்

*Benny Martin*

பிரியமான திருமறை ஆசான் வாசகர்களாகிய உங்கள் யாவருக்கும் நேசர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் மீண்டும் இக்கட்டுரையின் வாயிலாகச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இக்கட்டுரையில் விதைக்கிறவனுடைய உவமையிலிருந்து சில உண்மைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள நான் ஆசைப்படுகிறேன். லூக்கா எட்டாம் அதிகாரத்தில் இந்த உவமை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது விதைக் கிறவனுடைய உவமை என்றழைக்கப்பட்டாலும், இது உண்மையில் விதைக்கிறவனைப் பற்றியில்லாமல் விதை விழும் நிலத்தைப் பற்றியது. இவ்வசனப் பகுதியில் உலக இரட்சகர் இவ்வுலகிலுள்ள ஒவ்வொருவரைப் பற்றியும் விவரிக்கிறார். என்ன! என்னைப்பற்றி இவ்வசனப் பகுதியில் இயேசு கிறிஸ்து விவரித்திருக்கிறாரா என்று நீங்கள் புருவத்தை உயர்த்துவது எனக்குத் தெரிகிறது. உங்கள் பெயரும் என் பெயரும் இங்கே நம் இரட்சகரால் குறிப்பிடவில்லை என்பது உண்மைதான். ஆனால், உங்கள் இருதயத்தைப் பற்றியும் என் இதயத்தைப்பற்றியும் இவ்வசனப் பகுதியில் அதாவது இந்த விதைக்கிறவனுடைய உவமையில் விவரித்திருக்கிறார் (லூக்கா 8:4–15).

நானிலத்தை ஆளும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்து நான்கு விதமான நிலங்களைப் பற்றி விவரிப்பதன் மூலமாக மனிதர்களுடைய நான்கு விதமான இருதயங்களைப் பற்றி விவரித்திருக்கிறார். நம் இருதயம் எப்படிப்பட்டது? பிரியமானவர்களே, இதற்கு உலகப் பிரகாரமான விளக்கங்கள் ஏராளமாக, தாராளமாக இருந்தாலும் கூட வேதவசனம் **எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?** என்று இருதயத்தைப் பற்றி அறிவிக்கிறது (எரேமியா17:9). உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இருதயத்தைப் பற்றிய இந்த உலகளாவிய உண்மையை உதிர்த்திருக்கிறார். இவ்வுலகில் வாழும் மக்கள் எல்லாரும் இந்த நான்கு வகையான இருதயங்களை உடையவர்களாகவே இருக்கிறார்கள். இவ்வுலகில் நாட்டுக்கு நாடு மனிதர்களுடைய நிறத்தில் மாற்றம் இருக்கலாம், பொருளாதாரத்தில் ஏற்ற இறக்கங்கள் இருக்கலாம். ஆனால், எல்லோரும் இந்த நான்கு வகையான

இருதயங்களையே பெற்றிருக்கிறார்கள். பருவங்கள் உரு மாறினாலும் துருவங்கள் இடம் மாறினாலும் இதுதான் உலகளாவிய உண்மை. நாம் எவ்வகையான இருதயத்தைப் பெற்றிருக்கிறோம் என்பது நம் நித்தியத்தை தீர்மானிக்கிறபடியால் சத்தியத்தின் சத்தத்திற்கு செவி கொடுப்போம்.

**வழியருகே இருதயம்**

நம் அருமையான இயேசு முதல் வகையான இருதயத்தை வழியருகே இருதயம் என்று வரையறுக்கிறார். [லூக்கா 8:11] ல் விதை தேவனுடைய வசனம் என்று உவமையின் கருப்பொருளை தெரிவித்திருக்கிறார். நம் இந்தியா போன்ற விவசாய நாட்டில் நிலத்தில் நாமே விதை விதைத்திருப்போம் அல்லது மற்றவர்கள் விதைப்பதையாவது பாத்திருப்போம். ஒவ்வொரு சிறு விதையிலும் ஜீவன் இருக்கிறது. அது நம் கண்ணுக்கு முன்பாக மண்ணிலிருந்து முளைத்து தழைத்து கனி தருவதை நாம் அறிந்திருக்கிறோம். மண்ணில் விதைக்கப்பட்ட விதை மிகுந்த வல்லமையுடன் மண்ணை துளைத்துக் கொண்டு முளைக்கிறது. ஆவிக்குரிய விதையாகிய தேவனுடைய வசனத்திற்கும் மிகுந்த வல்லமை உண்டு. அதற்கு எல்லையே இல்லை! இப்போது வழியருகே இருதயத்திற்கு மறுபடியும் வருவோம். இவ்வகையான இருதயத்தை கொண்டிருக்கும் ஒரு நபர் தேவனுடைய வசனத்தை தன் இருதயத்தின் மேல் தட்டில் மட்டும் வைத்திருக்கிறார். இருதயத்திற்குள் ஊடுருவ அனுமதிப்பதில்லை. மத்தேயு 13:19-ல், நம் ஆண்டவர் இவ் வகையான இருதயத்தைக் கொண்டிருப்பவர்கள் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கிறார்கள் என்று சொல்கிறார். தேவனுடைய வார்த்தையை கேட்கும்போது அவர்களுக்கு எந்த, உணர்வோ, விதமான உற்சாகமோ உள்ளத்தில் ஏற்டுவதில்லை. எனவே, பிசாசானவன் வந்து வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப் போடுகிறான். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான் என்று தேவன் வாக்குரைத் திருக்கிறார் [யாக்கோபு 4:7]. ஆனால், வழியருகே இருதயத்தை கொண்டிருக்கும் ஒரு நபர் தேவனுடைய வார்த்தைக்குச் செவி சாய்ப்பதில்லை. அந்த நபர் பிசாசின் வலையில் விழுந்து தன் நிலையை இழந்து விடுகிறார். அதன் விளைவாகத் தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பதுமில்லை, அவர் இரட்சிக்கப்படுவதுமில்லை. அருமையானவர்களே! நம்மில் ஒருவருக்கும் இவ்வகையான இருதயம் அறவே வேண்டாம்.

**கற்பாறை இருதயம்**

இது இரண்டாவது வகையான இருதயம். இவ்வகையான இருதயத்தைக் கொண்டவர்கள் ஆரம்பத்திலே தேவனுடைய வார்த்தையை சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், இவ்வகையான இருதயத்தில் பிரச்சனை என்னவென்றால், இந்த நபருக்கு ஆவிக்குரிய வேர்கள் இருப்பதில்லை, மேலும் அவர் தேவனுடைய வார்த்தை உள்ளத்தில் ஊடுருவ அனுமதிப்ப தில்லை. இவ்வகையான இருதயத்தைக் கொண்டிருப்பவர்கள் மேலோட்டமான ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ்பவர்கள். நம் அருமை இரட்சகர் இவர்களுக்கு என்ன நடக்கும் என்று சொன்னார்? மத்தேயு 13:21–ல், **வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவார்கள்** என்று சொன்னார். நீங்களும் நானும் தேவனுடைய வார்த்தையை எப்படி இருதயத்திற்குள் ஆழமாக ஊடுருவச் செய்வது? அதற்கு அனுதின முயற்சியும், பயிற்சியும் தேவை. நாம் அனுதினமும் தேவனுடைய வார்த்தைகளை வாசித்தால் மட்டும் போதாது அவைகளை நாம் ஆழமாகவும், விரிவாகவும் சிந்திக்க வேண்டும். நம் அன்றாட வாழ்வில் தேவனுடைய வார்த்தைகளை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்று யோசித்து அவைகள் நம் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தத்தக்கதாக உள்ளத்தில் நாட்டவேண்டும் (யாக்கோபு1:21). அப்போதுதான் நம்மிடத்தில் ஆழமான ஆவிக்குரிய வேர்கள் காணப்படும். மேலும், நாம் உபத்திரவங்கள் மற்றும் பாடுகளால் தடம்மாறி நிலை மாறும்போது இடறலடைய மாட்டோம்.

**முள்ளுள்ள இருதயம்**

இது மூன்றாவது வகையான இருதயம் இந்த முட்கள் தேவனுடைய வார்த்தையின் மீது எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறது? இவைகள் தேவனுடைய வார்த்தையை நெருக்கிப் போடுகிறது. இது இத்தகைய இருதயத்தை உடைய நபரின் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிக மோசமான விளைவுகளை ஏறப்படுத்தும். இவர் ஆவிக்குரிய கனியைக் கொடுப்பதற்கு வாய்ப்பே இல்லை. விவசாய ரீதியாகப் பார்த்தால், ஒரு விவசாயி தன் பயிர்கள் நடுவில் முட்கள் வளர்ந்தால் என்ன செய்வார்? அதை உடனே அகற்றிப் போடுவார். ஏனென்றால், அம்முட்கள் பயிர்களை நெருக்கிப்போடும். அது மட்டுமல்லாமல் அவைகள் அவருடைய வாழ்வையும், வாழ்வாதாரத்தையும் வற்றச் செய்துவிடும். பிரியமானவர்களே! நம் இருதயங்களில் ஆவிக்குரிய முட்கள் வளர்ந்தால் அவசரமாக, அவசியமாக

அகற்றிட வேண்டும். இந்த உவமையில் உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து எவைகளை ஆவிக்குரிய முட்களாக சொல்லியிருக்கிறார்? இப்பிரபஞ்சத்திற்குரிய கவலைகள், ஐசுவரியம், சிற்றின்பம் போன்றவைகள். இவைகள் நம் இருதய விருட்சத்தில் கூடுகட்டிக் குடியிருக்க நாம் அனுமதித்தால் தேவனுடைய வார்த்தைகளையும், நம் வாழ்க்கையையும் நெருக்கிப் போட்டுவிடும். மத்தேயு 13:22-ல், நம் ஆண்டவர் ஐசுவரியத்தின் மயக்கம் என்று குறிப்பிடுவதில் எந்த தயக்கமும் காட்டவில்லை. ஈராயிரம் வருடங்களுக்கு முன்பாக நம் அருமை இரட்சகர் சொன்ன வார்த்தைகள் இன்றளவும் உண்மையாக இருக்கிறது. இவ்வுலகம் ஐசுவரியத்தின் மயக்கத்தில்தான் மயங்கிக் கிடக்கிறது. பணப்பசி நிறைந்த இவ்வுலகம் காலை தோறும் பணச்சிந்தனையில்தான் கண் விழிக்கிறது. **பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை கச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்** என்று வேதாகமம் பண ஆசையைக் குறித்து நம்மை எச்சரிக்கிறது (1தீமோத்தேயு 6:10).

### நல்ல இருதயம்

இது நான்காவது வகையான இருதயம். இந்த இருதயத்தைத்தான் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நல்ல நிலத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிறார். பயிர் செய்யும் ஒரு விவசாயிக்கு நல்ல நிலம் கிடைத்தால் அது எல்லையில்லா மகிழ்ச்சியைக் கொடுக்கும். எனவேதான், நீங்களும் நானும் இவ்வகையான இருதயத்தைக் கொண்டிருக்க இறுதிவரை பாடுபட வேண்டும். மேலும், இயேசு கிறிஸ்து இவ்வகையான இருதயத்தைப் பற்றிச் சொல்லும்போது உண்மையும் நன்மையுமான இருதயமாக இருக்கிறபடியால் தீய சிந்தனைகள் இங்கு குடியிருக்கவே முடியாது, இந்த நல்ல இருதயத்திலிருந்து யாரும் தேவனுடைய வார்த்தையைக் பிரிக்கவோ பறிக்கவோ முடியாது. அடுத்ததாக, இவ்வகையான இருதயத்தைக் கொண்டிருக்கும் நபர் பொறுமை யுடனே பலன் கொடுக்கிறார். இவர் தேவனுடைய வார்த்தைகளை கேட்கிறவராய் மாத்திரம் இராமல் அதின்படி செய்கிற வருமாயிருக்கிறார் (யாக்கோபு 1:11). பிரியமானவர்களே, இது காறும் நாம் நான்கு வகையான நிலங்களை அதாவது இருதயங்களைப் பார்த்தோம். அதில் உண்மையும் நன்மையுமான இருதயமே தேவனுக்குப் பிரியமான இருதயமாக இருக்கிறபடியால் இவ்வகையான இருதயத்தை அதாவது உண்மையும் நன்மையுமான இருதயத்தைக் கொண்டு தேவனைப் பிரியப்படுத்துவோம். ★

# கிறிஸ்து என்னும் மார்க்கம்

Bro. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார்

(தொடர்ச்சி...)

## *III*. ஓய்வு நாளும், வாரத்தின் முதல் நாளும்

**இயேசுவானவர் உயிர்த்தெழுந்தது வாரத்தின் முதல் நாள்.**

- இயேசுவானவர் அடக்கம் செய்யப்பட்ட பிறகு கலிலேயாவிலிருந்து அவருடனே கூட வந்திருந்த ஸ்திரீகளும் பின்சென்று, கல்லறையையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து, திரும்பிப் போய், கந்தவர்க்கங்களையும் பரிமளத்தையும் ஆயத்தம்பண்ணி, கற்பனையின்படியே ஓய்வு நாளில் ஓய்ந்திருந்தார்கள், லூக்கா.23:55,56.
- அந்த நாள் ஆயத்த நாளாயிருந்தது ஓய்வுநாளும் ஆயத்தமாயிற்று என்று லூக்கா 23:54 ல் கூறப்பட்டுள்ளது. இது சனிக்கிழமை ஆரம்பமாயிற்று ஓய்வு நாளுக்கு மறுநாள் என்பதாகும். வாரத்தின் முதல் நாள் இயேசுவானவர் உயிர்த்தெழுந்தார்.
- மத்தேயு தன்னுடைய எழுத்தில் ஓய்வு நாள் முடிந்து வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில் மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள் மத்தேயு 28:1.
- தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி... அவர் இங்கே இல்லை. தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்; மத். 28: 5,6 – என்று உறுதியாக இயேசுவானவர் வாரத்தின் முதல் நாளிலே (இன்றைய நாட்களின் ஞாயிற்றுக்கிழமை) உயிர்த்தெழுந்தார் என்று கூறினான்.
- தீர்க்கதரிசியாகிய மாற்கு தன்னுடைய புத்தகத்தில் வாரத்தின் முதல் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்த பின்பு என்று குறிப்பிடுகிறார், மாற்கு 16:9
- லூக்காவும் எழுதும்போது, வாரத்தின் முதல் நாள் அதி காலையிலே ஸ்திரீகள் தாங்கள் ஆயத்தம் பண்ணின கந்த வர்க்கத்தை இயேசுவின் உடலோடு வைப்பதற்காக வந்தார்கள், ஆனால் அங்கேயிருந்த இரண்டுபேர் (தூதர்கள்) உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை உயிர்த்தெழுந்தார் என்று சொன்னார்கள், லுக்கா 24:1,5,6.

❖ யோவான் அப்போஸ்தலன் தன் பதிவில் வாரத்தின் முதல் நாள் காலையில், அதிக இருட்டோடே மகதலேனா மரியாள் கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப் போட்டிருக்கக் கண்டாள். அவள் தூதர்களோடு சம்பாஷனைப் பண்ணிக் கொண்டு திரும்பிப் பார்த்தபோது இயேசு நிற்கிறதைக் கண்டாள் என்று எழுதுகிறார் யோவான் 20:1,13,14.

❖ ஆக இந்த நான்கு புத்தகங்களிலும் இயேசுவானவர் வாரத்தின் முதல் நாளிலே (ஞாயிற்றுகிழமையிலே) உயிர்த்தெழுந்தார் என்று உறுதியாகக் கூறப்பட்டுள்ளது. அவர் ஓய்வு நாளிலே உயிர்த்தெவில்லை.

***IV.*** பெந்தெகொஸ்தே நாள் எப்போதும் வாரத்தின் முதல் நாளில் தான் வரும். லேவி.23:15,16.

✳ பஸ்கா பண்டிகையைத் தொடந்து வரக்கூடிய ஓய்வுநாள் என்று யூதர்கள் அழைப்பார்கள்,யோவா.19:31,42 அப்படித்தான் இயேசுவானவர் வியாழக்கிழமையிலே ஆயத்த நாளுக்கு முன்தினம் பஸ்கா அனுசரித்தார் லூக்கா 22:13,14

✳ மறுநாள் இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்டார் அந்த நாள் ஆயத்த நாள் அதற்கு மறுநாள் ஓய்வு நாள் அது பெரிய ஓய்வு நாள் என்று வேதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது

✳ ஏனென்றால் அந்த பெரிய ஓய்வு நாளுக்கு மறுநாள் துவக்கி 50 நாட்கள் எண்ண வேண்டும். எண்ணிக்கை ஆரம்பிப்பதும் வாரத்தின் முதல் நாள் இப்படி ஏழு வாரங்கள் அதாவது 7★7=49 நாட்கள் நிறைவடைந்த பின்பு வரும் 50 வது நாள் வாரத்தின் முதல் நாள். இந்த நாள் தான் பெந்தெகொஸ்தே நாள்.

✳ இந்த பெந்தெகொஸ்தே நாளில் தான் பேதுருவும் மற்ற 11 அப்போஸ்தலர்களும் ஆக 12 பேர் அப் 2-ம் அதிகாரத்தில் எருசலேமில் கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கம் செய்தார்கள், அப். 2:1,14.

✳ இயேசுவானவர் உயிர்த்தெழுந்த நாள்தான் பெந்தெகொஸ்தே பண்டிகைக்கான எண்ணிக்கையின் முதல் நாள். அதன் பிறகு 40 நாட்கள் அவர் சீஷர்களுக்கும் மற்றும் அநேகருக்கும் தரிசனமாகி தம்மை உயிரோடிருக் கிறவராகக் காண்பித்தார். அப். 1:3

✳ அதன் தொடர்ச்சியாக 40-ம் நாள் அவர் சிஷர்கள் கண்களுக்கு முன்பாகப் பரமாறிச் சென்றார் அப்.1:9.

✳ 10நாட்கள் சீஷர்கள் எருசலேமின் தங்கியிருந்து இயேசு வின் கட்டளையை நிறைவேற்றினார்கள், அப் 1:5.

- இயேசுவானவர் ஓய்வு நாளின் முறைமைகளையும் சிலுவையில் அறைந்து விட்ட பின்பு, புதிய ஏற்பாட்டு காலத்தில் தாம் உயிர்தெழுந்த வாரத்தின் முதல் நாளிலே ஆராதனை நிறைமையை ஏற்படுத்தினார். கொலோசெயர் 2:14,15.
- இயேசுவானவர் பழைய ஏற்பாட்டை ( உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவந்தபோது, ஓய்வுநாளின் முறைமைகளையும் முடிவுக்குக் கொண்டு வந்தார். கெலோ .2:16.
- அதன் பிறகு வந்த எல்லா நடைமுறையான ஆராதனைக்கு சம்பந்தப்பட்ட காரியங்களும் வாரத்தின் முதல் நாளிலே நடந்தது.
- முதல் முதலில் 3000–ம் பேர் சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டதும் பெந்தெகொஸ்தே நாளான வாரத்தின் முதல் நாள், அப்.2:41,47
- சபையார் கூடிவந்து அப்பம்பிட்டதும் (இராயேஜனம் அனுசரித்ததும்) வாரத்தின் முதல் நாள், அப்.20:7. (இது கர்த்தர் பந்தி அல்ல என்று சிலர் வாதிடுவார்கள் இது அவர்கள் அறியாமை)
- அன்றைய தினம் பிரசங்கமும் செய்யப்பட்டது என்பது தெளிவான பதிவாக உள்ளது,அப். 20:7
- வாரத்தின் முதல் நாளிலே சபை தன்னிடத்திலே எதையாகிலும்(காணிக்கை) சேர்த்து வைக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறார் Iகொரி. 16:1,2. இது தர்மப்பணம் மட்டுமே, காணிக்கை அல்ல என்று சிலர் சொல்லலாம். ஆனால், இரண்டு வசனங்களில் சொல்லும் கருத்தாவது சேர்க்கப்படும் பணத்தில் ஒரு பகுதி தர்மத்திற்குப் போக வேண்டும் என்பதாகும்.
- ஏனென்றால் சபையில் சேகரிக்கப்படும் பொருளாதார மானது, சபையின் பக்தி வருத்தி, சுவிசேஷ ஊழியம் தர்ம சகாயம் ஆகிய மூன்று காரியங்களை நிறைவேற்ற வேண்டும்.

**முடிவுரை:**

- இயேசுவானவர் ஓய்வுநாள் நியமங்களை சனிக்கிழமையில் நடந்து வந்த பழைய ஏற்பாட்டு நியமங்களை மாற்றிவிட்டார் மத். 12:8.
- அவருடைய ஆளுகையில் அதாவது பறமேறிச் சென்று அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு ஆராதனை முறைமைகளை வாரத்தின் முதல் நாளுக்கு மாற்றிவிட்டார். அப். 2:35,36; வெளி. 5:7
- ஆகையால் இன்றைக்கு ஞாயிறுக்கிழமையை வேதத்தின் படி ஓய்வு நாள் என்று சொல்வது மிகவும் அறியாமை ஆகும். தேவன் ஆசீர்வதிப்பாராக. ★

# ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்?

Bro K. பாண்டியன்

கேள்விகள் வேதாகமத்தில் அநேகம் உள்ளது. கேள்விகள் தான் மனிதனின் அறிவை வளர்க்கிறது என்று உலகம் சொல்லுகிறது. ஆனால், தேவனுடைய வார்த்தையில் நாம் கற்றுக்கொள்ள சகல வாய்ப்புகளும் உள்ளது, அதை விசு வாசிக்கவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம். பொதுவாக வேதத்தில் மனிதன் கேட்டுப் புரிந்துகொள்ள வேண்டிய அனைத்து கேள்விகளுக்கும் பதில்கள் அடங்கியுள்ளது. அதற்காக மனிதன் தேவனைப் பார்த்து கேட்பது போலவும் மனிதன் மனிதனைப் பார்த்துக் கேட்பது போலவும் அநேகக் கேள்விகளை தேவன் தம்முடைய வேதத்தில் வெளிப் படுத்தியுள்ளார். அதில் முதலாவது கேள்விதான் நம்முடைய கட்டுரையின் தலைப்பாக ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்? என்று தேவன் கேட்ட கேள்வியாக இருக்கிறது. பொதுவாக மனிதனைக் கேள்வி கேட்கும் போது சிலர் இவர் யார் என்னிடம் கேள்வி கேட்பதற்கு என்று முறுமுறுப்பதுண்டு! ஆனால் தேவன் கேட்பதற்கு சகல உரிமையும் உண்டு என நாம் அறிவோமாக.

மனிதனை உண்டாக்கும் முன்பாகவே அவனுக்குத் தேவையான சகலத்தையும் சிருஷ்டித்துக் கொடுத்தவர் தேவனே. பூமியைச் சிருஷ்டித்து அதில் மனிதன் வாழக்கூடிய சூழ்நிலையை உண்டாக்கி அவன் உணவுக்குத் தேவையான சைவ, அசைவ உணவுக்கான எல்லாத் தேவைகளையும் தேவனே உண்டாக்கினார். பின்பு மண்ணிலிருந்து மனுஷனை உண்டாக்கி அவனுக்கு தம் ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதின பின்பு தான் உயிருள்ள மனிதனாக உருவானான். இப்படிப்பட்ட தேவனுக்கு மனிதனைப் பார்த்து கேள்வி கேட்க சகல உரிமையும் உண்டல்லவா? ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்? என தேவன் கேட்டது அவன் இருக்கும் இடம் தெரியாமல் அல்ல. சங்கீதக்காரன் 139 ல் நான் வானத்துக்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கிறீர். நான் பாதாளத்தில் படுக்கைப் போட்டாலும் நீர் அங்கேயும் இருக்கிறீர், சமுத்திரத்திரத்தின் கடைசியில் போய்த்த கினாலும் அங்கேயும் உமது கரம் என்னைப் பிடிக்கும் என்கிறார். எனவே உம்முடைய ஆவிக்குரிய மறைவாக எங்கே போவேன்? (சங் 139:7) என வாசிக்கிறோம். பிறகு தேவன் கேட்ட கேள்விக்கு அர்த்தம் என்னவெனில், நான் உன்னை வைத்த இடத்தில் மகிழ்ச்சியாக இல்லாமல் நீ ஏன் மறைந்துள்ளாய் என்பதே! இப்போது நம்மையும் தேவன் கேட்பதாக

நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். நம் தேவைகளைக் கூட தேவன் சந்தித்துள்ளார். உணவு,உடை இருப்பிட தேவைகளைச் சந்திக்கிறார். நாம் சபை கூடும் நேரத்தில் அங்கு காணப்படாமற் போனால் உன்னை இந்தக் கேள்வி தாக்க வேண்டும் என்பதை நினைவில் வை!

தேவனுடைய முக்கியமான குணங்களில் ஒன்று அவர் உன்னோடே உறவாட, ஐக்கியமாயிருக்க விரும்புவது. மனிதனும் தேவனும் உறவாடுவது ஜெபத்தில் என்றும், தேவனும் மனிதனும் உறவாடுவது வேதத்தின் வாயிலாக என்றும் ஒரு அழகிய பாடல் நாம் பாடுகிறோம். அல்லவா? ஆம் சர்வ வல்லமையுள்ள, சர்வத்தையும் உண்டாக்கிய சிருஷ்டிகர், வானத்தையும், பூமியையும், சமுத்திரங்களையும் உண்டாக்கி அவைகளிலுள்ள யாவற்றையும் போஷித்து வருகிற மகாப் பெரிய தேவன் இந்த சாதாரண மனிதனுடன் உறவாட விரும்புகிறார் என்பது எவ்வளவு பெரிய விஷயம்! எவ்வளவு பெரிய பாக்கியம், சிலாக்கியம்! இதை உணராத நாம் வேதம் வாசிப்பதிலும், ஜெபிப்பதிலும் குறை உள்ளவர்களாக இருக்கிறோமே? இனி வரும் நாட்களில் தேவனோடே ஐக்கியமாயிருக்க வேதம் வாசிப்பதிலும் ஜெபிப்பதிலும் இன்னும் அதிகக் கவனம் செலுத்துவோம். வேதபாரகர், பரிசேயர் என்பவர்களது நீதியிலும் உங்கள் நீதி அதிக கவனமாயிருக்க வேண்டும் என்பதில் அதிகக் கவனம் செலுத்துவோம். வேதபாரகர், பரிசேயர் என்பவர்களது நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிருக்க வேண்டுமா? நாம கரண சபை மக்களைக் காட்டிலும் அதிகமாக தேவனோடே உறவாடுங்கள். தேவ ஆசீர் உங்கள் குடும்பத்தில் விளங்கும்.

ஆதாமே நீ எங்கே இருக்கிறாய் என்று தேவன் கேட்டதற்கு அவன், நான் நிர்வாணி, பயந்து ஒளிந்து கொண்டேன் என்கிறான். பிறந்த எந்தக் குழந்தையும் நான் அம்மணமாக உள்ளேன் என்று தன் தாயிடம் சொன்ன தில்லை! ஆதாம் சொன்னது அப்படிப்போல உள்ளது. தேவனுடைய கண்களுக்கு முன்பாக சகலமும் நிர்வாணமாயிருக்கிறது என்று வேதம் சொல்கிறது (எபி. 4:13) ஆதாமின் பயத்திற்குக் காரணம் பாவம். தேவனுடைய சட்டங்களை மீறுவது பாவம் என்றால் உலகத்திலேயே மிகச்சிறிய பைபிள் ( தேவனுடைய சட்டம்) ஆதாமினுடையது தான், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம் என்பதே அவனுக்கு கொடுக்கப்பட்ட பைபிள்! முதலில் ஆதாமைக் கேள்வி கேட்ட தேவன் இரண்டாவதாக ஏவாளிடம், நீ இப்படி செய்தது என்ன? என்றார். ஆனால், சர்ப்பமாகிய பிசாசினிடம் அவர்அப்படி கேள்வி கேட்கவில்லை என்பதைக் கவனியுங்கள்! காரணம் மத்தே 25:41ன் படி பிசாசுக்காகவும் அவனுடைய தூதர் களுக்காகவும் ஏற்கனவே நித்திய அக்கினி ஆயத்தம் பண்ணப்பட்டுள்ளது. அதிலே போக துணைக்காகத் தான் அவன் மனுக்குலத்தை

தந்திரமாக வஞ்சித்து கொடுத்து வருகிறான். அவன் தந்திரங்களை வெளியரங்கமான கோல மாக்கவே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டு அவனை ஜெயித்தார். ஆதாமே நீ எங்கே என்பது அன்பின் கேள்வியாகவே உள்ளது. அது இன்றைக்கும் மனுஷர் ஒவ்வொருவரையும் பார்த்துக் கேட்கும் கேள்வியாக அமைந்துள்ளது.

ஆதாம் நான் பயந்து ஒளிந்து கொண்டேன் என்கிறான். பாவம் மனிதனை தேவனிடமிருந்து பிரிக்கும் பயத்தை உண்டாக்குகிறது. பயம் என்ற உணர்வு நாம் அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு உணர்வு – பயம் வரும் போது நம் இதயத்துடிப்பு அதிகரிக்கிறது. மற்றவரைப் பற்றிய அக்கறை அகன்று போகின்றது. யாருக்கும் ஏன் நமக்கே நாம் பிரயோஜனமற்று போகிறோம். அதேபோல் தேவனுடைய வார்த்தையால் வரும் விசுவாசம் அதற்கு நேர் எதிரடையாக வேலை செய்கிறது. நீ ஒன்றுக்கும் உதவாதவன் என்று உலகமே சொன்னாலும், நான் தேவனுக்கு அன்பின் பிள்ளை என்று உள்ளம் மகிழ்கிறது. நீ வீணாய் போய் விடுவாய் என்று உலகம் பயமுறுத்தினாலும் என் எதிர் காலத்தை எல்லாம் வல்ல தேவன் வழிநடத்துவார் என்று விசுவாசம் என்னைத் தேற்றுகிறது. ஆகவே, பாவம் செய்யக் கூடிய வாய்ப்புகளை பிசாசு ஏற்படுத்தினாலும், அதில் விழுந்து போகாமல், அல்லது செய்த பாவங்களை அறிக்கையிட்டு, திருந்தி தேவனுக்குப் பிரியமாக வாழ பிரயாசப்படுவோம். கிறிஸ்துவின் கிருபை நம் அனைவரோடுகூட இருப்பதாக! ஆமென்! ★

---

## நாளும் நடப்பும்

- பேரறிவாளன் உட்பட 7 பேரை விடுவிக்கக் கோரி அமெரிக்காவில் சீக்கியர்கள் தமிழக கவர்னருக்கு கடிதம்.
- அரசுப் பள்ளிகளில் கல்வித் தரத்தை தனியார் பள்ளிகளுக்கு இணையாக உயர்த்த தமிழக அரசு முடிவு.
- சூரியனை ஆய்வு செய்யும் விண்கலப்பணி இன்னும் மூன்று ஆண்டுகளில் நிறைவடையும்: விஞ்ஞானிகள் அறிவிப்பு.
- தமிழகத்தில் வரும் ஏப்ரல் 18 ஆம் தேதி பாராளுமன்றத் தேர்தல்.
- இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரை ஆஸ்திரேயா வென்றது.